செய்தி வெளியீடு எண்–568 நாள்–5.9.2007

**மாநில நுகர்வோர் உரிமை தின விழாவில் நுகர்வோர் விழிப்புணர்வு கையோடுகளை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி வெளியிட்டார்கள்**

* * * * * * * * *

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக மாநில நுகர்வோர் உரிமை தினவிழா சென்னை கலைவாணர் அரங்கில் இன்று (5.9.2007) நடைபெற்றது. விழாவில் நுகர்வோர் விழிப்புணர்வு கையோடுகளை வெளியிட்டு சிறப்புரையாற்றி மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் பேசும் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையிலான இவ்வரசு பொறுப்பேற்றது முதல் நுகர்வோர் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை அளித்துள்ளார்கள். இதில் நடப்பு ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுகளில் உள்ள மூன்று லட்சம் மகளீருக்கு நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி அளிக்க ரூ. 69 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். மேலும். விழிப்புணர்வு கையேடுகளான மருத்துவமனைகள் மற்றும் நோயாளிகளின் உரிமைகள், முதலீடு வழிமுறைகள், மின்சாரம், போக்குவரத்து பயணிகளுக்காக, தங்க நகைகள் வாங்குவது எப்படி, நுகர்வோர் பார்வையில் பொருட்களும் சேவைகளும், மொமைல் போன், காப்பீடுகள், குடியிருப்பு, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் என்ற 10 துறைகளில் வெளியிடப்பட்ட விழிப்புணர்வு கையோடுகளை விவரித்து, நுகர்வோர் விழிப்புணர்வின் அவசியம் குறித்து பேசினார்கள்.

விழா தலைமையுரையாற்றி மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு பேசும் போது கடந்த ஆண்டு 500 நுகர்வோர் மன்றங்கள் தொடங்கப்பட்டு, தற்போது சிறப்பாக செயல்பட்டுவருகிறது. நடப்பாண்டிலும் 500 நுகர்வோர் மன்றங்கள் தொடங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இம்மன்றங்கள் பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைகழங்களில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வரும் தலைமுறைகள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் எனவும், இத்திட்டங்களை நிறைவேற்ற ரூ. 39 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்கள்.

விழா நிறைவில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி அவர்கள் நுகர்வோர் விழிப்புணர்வு பணியில் சிறப்பாக சேவை புரிந்தவர்களுக்கும், பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை ஆணையர் திரு. எல்.என். விஜயராகவன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலர் திரு. எஸ்.மச்சேந்திரநாதன், இணை ஆணையர் திரு. எஸ்.சந்திரமோகன் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

நுகர்வோர் உரிமை தின விழாவில் நுகர்வோர் விழிப்புணர்வு குறித்து கருத்தரங்கமும், திண்டுக்கல் ஐ.லியோனியின் பட்டிமன்றமும் நடைபெற்றது.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.